2011 ஜனவரி 12] [திரு. தி.க. ராஜா]

சொன்னார். அவரும் இதைக் கருத்திலே கொண்டு இதைச் செய்ய வேண்டும். அவர் எங்கள் மாவட்டத்திற்குச் சொந்தக்காரரர். அதேபோல, விழுப்புரம், சேலம் மாவட்டங்களையும் நிருவாக நலன் கருதி இரண்டாகப் பிரித்துத் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நம்முடைய கேரளாவிலே 47 இலட்சம் தமிழர்கள் வாழ்கிறார்கள். குறிப்பாக, கொச்சியில் 5 இலட்சம் தமிழர்கள் வாழ்கிறார்கள். அங்கு ஐக்கிய தமிழ்ச் சங்கம் 42 ஆண்டுக் காலமாக நடந்து வருகிறது. அவர்கள் கட்டடம் வேண்டுமென்று உதவி கேட்டு வருகிறார்கள். டெல்லி தமிழ்ச் சங்கத்திற்கே உதவி செய்த நம்முடைய தமிழக அரசு, கேரள மாநிலத்தில் இருக்கிற தமிழ்ச் சங்கத்தின் கட்டட வசதிக்கும் உதவ வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். ஈழத்திலே . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

6. விதி 110-ன்கீழ் அறிக்கை

பிரதம பால் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு குறித்து மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு, சட்டப் பேரவை விதி 110-ன்கீழ் இந்த அறிக்கையைச் சமர்ப்பிக்கிறேன்.

பிரதம பால் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்குப் பணி நிலைத் திறன், பணியாளர் சிறப்புத் துணை விதிகள், பணி வரன்முறைப்படுத்துவது மற்றும் ஊதிய விகிதம் நிர்ணயம் செய்தல் தொடர்பாக அமைக்கப்பட்ட குழுவின் அறிக்கையினைப் பரிசீலித்து, பணியாளர் பணி நிலைத் திறன், உற்பத்தி அடிப்படையிலான ஊக்கத் தொகை, ஆண்டு ஊதிய உயர்வு, இலாபத்தில் செயல்படும் பால் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களின் ஊதிய உயர்வு போன்ற பரிந்துரைகளை ஏற்று அரசு ஆணை வெளியிட்டதுடன், மேற்படி பிரதம பால் கூட்டுறவுச்

[திரு. உ. மதிவாணன்] [2011 ஜனவரி 12

சங்கப் பணியாளர்களுக்கு அப்பிரதமச் சங்கங்கள், 2008–2009 ஆம் ஆண்டு இலாபத்தில் செயல்படும்பட்சத்தில், 20 சதவீதத்திற்கு மிகாத சம்பள உயர்வு வழங்க ஏற்கெனவே ஆணையிடப்பட்டது. அவ்வாணையின் அடிப்படையில் ஏற்கெனவே 1–10–2009–ல் வழங்கப்பட்ட சம்பள உயர்வில், தற்போது 54 சதவீத சம்பள உயர்வளிக்க அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி பணியாளர்கள் ஒவ்வொருவரும் குறைந்தபட்சமாக மாதம் ரூ.125/–லிருந்து அதிகபட்சமாக ரூ.500/– வரை பயன்பெறுவர். இது தவிர 1–10–2009 முதல் வழங்கப்பட்ட சம்பள உயர்வில் பயனடையாதவர்கள் மற்றும் 1–4–2009–க்கு பிறகு பதிவு செய்யப்பட்ட, மறுமலர்ச்சி செய்யப்பட்ட சங்கங்களின் பணியாளர்களுக்கு, ரூ.125/– வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இதனால் தமிழ்நாட்டிலுள்ள 8,246 பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் சுமார் 18,588 பணியாளர்கள் பயன் அடைவார்கள். இந்தச் சம்பள உயர்வு 1–1–2011 முதல் அமல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ராஜா, உரையை முடித்துக் கொள்ளுங்கள். அடுத்து நான் உங்கள் கட்சிக்காரர் ஒருவரை அழைக்க வேண்டும்.

திரு. தி.க. ராஜா: ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், நீண்ட காலப் போராட்டத்திற்குப் பிறகு ஒரு கலைக் கல்லூரியைக் கொடுத்தார்கள். ஆனால் அது தொடங்கப்படவில்லை. நாங்கள் இடமெல்லாம் தேர்வு செய்து எங்களுடைய மாவட்ட அமைச்சரிடத்திலும் சொல்லியிருக்கிறோம். இந்த ஆண்டு அந்தக் கலைக் கல்லூரியைத் தொடங்குவதற்கு அவர் அனுமதி வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, திருப்பத்தூர் பொது மருத்துவமனை வேலூருக்கு அடுத்து மிகப் பெரிய மருத்துவமனை. அதற்கு மாவட்ட மருத்துவமனைக்கு இணையான அந்தஸ்தை உயர்த்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு finance, வட்டிக்காரர்களுடைய அட்டூழியம் அதிகமாக இருக்கிறது. இன்றைக்குக்கூட வேலூரில்